**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**
**SESSIONS CASE NO. 40 OF 2013**
**Deposition of Witness for : PW-9**

| | |
|---|---|
| Name | : திரு. சேகர் |
| Father's Name | : முனியாண்டி |
| Village | : கருவட்டான்பாறை |
| Taluk | : தி.மலை |
| Caste | : ஆதிதிராவிடர் |
| Calling | : ஆட்டோ டிரைவர் |
| Religion | : இந்து |
| Age | : 49 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09-09-2019 .

முதல் விசாரணை.

நான் தற்போது பெரியகல்லப்பாடி மதுரா கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு 2 பெண் ஒரு மகன். நான் ஆட்டோ ஓட்டி ஜீவனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 7 வருடத்திற்கு முன்பு நான் பவித்திரம் கூட் ரோடில் ஆட்டோ ஸ்டேண்டில் இருந்து அங்கு ஆட்டோ ஓட்டி வந்தேன்.. 3.00 , 4.00 மணிக்கு ரமேஷ் என்பவர் வந்து என்னை மருத்துவமனைக்கு போக வேண்டும் என்று என்னை கூப்பிட்டார். நான் கூப்பிட்டதும் ரமேஷ் வீட்டிடம் சென்றேன். இந்த வழக்கில் அடிப்பட்ட ரமேஷ் என்பவரின் தம்பி கர்ணன் என்பவரை ஆட்டோவில் ரமேஷ் , அடிப்பட்டவர் உடன் ஒருவர் நான் 4 பேரும் காட்டாம்பூண்டி அரசாங்க மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கே மருத்துவமனையில் முடியாது என்றதால் திருவண்ணாமலை ஜி.எச்.சுக்கு அழைத்துக் கொண்டு வந்து சேர்த்தேன். மறு நாள் அவர் இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். அவர் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

அடிப்பட்டவர் எவ்வாறு யாரால், காயம் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை.

ஒப்பம்/- சேகர்

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- C. Thirumagal
Principal Sessions Judge,
Tiruvannamalai.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 40 OF 2013**

**Deposition of Witness for : PW-10**

| | |
|---|---|
| Name | : திரு. சின்னையன் |
| Father's Name | : சின்னசாமி |
| Village | : தச்சம்பட்டு |
| Taluk | : தி.மலை |
| Caste | : ரெட்டியார் |
| Calling | : விவசாயம் |
| Religion | : இந்து |
| Age | : 50 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09-09-2019 .

முதல் விசாரணை.

நான் தற்போது தச்சம்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். பம்பு செட் மோட்டாருக்கு ஒயரிங் வேலையும் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 3 எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.த.சா-ஆ. 4 (வரிசைகள்) ஆகும்.** 7 வருடத்திற்கு முன்பாக என்னுடைய தம்பி சம்சாரம் தச்சம்பட்டில் இறந்து விட்டார். அங்க போய் நாங்க அடக்கம் செய்து விட்டு வந்த பிறகு சம்பவத்திற்கு மறு நாள் போலீசார் வந்து 2 செங்கல், 1 கருங்கல் கோவிலுக்கு முன்பு கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றினார்கள். அங்கு எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். **கைபற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ. 5 (வரிசைகள்) ஆகும்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலீசார் ஏற்கனவே எழுதி வைத்திருந்த பேப்பரில் தான் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரி. 4 கையெழுத்தையும் சம்பவ இடத்திலேயே போட்டேன். காலையில் 9.00 மணி அளவில் கையெழுத்து போட்டேன். இறந்து போன வெங்கடேசன்

எனக்கு அக்கா மகன் ஆகும். இறந்து போன வெங்கடேசன் என்னுடைய உறவினர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் சொல்ல வந்தேன் என்றால் சரி.

ஒப்பம்/- சின்னையன்

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- C. Thirumagal
Principal Sessions Judge,
Tiruvannamalai.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**SESSIONS CASE NO. 40 OF 2013**
**Deposition of Witness for : PW-11**

| | |
|---|---|
| Name | : திரு. ராமகிருஷ்ணன் |
| Father's Name | : அண்ணாமலை ரெட்டியார் |
| Village | : பெரியகல்லபாடி |
| Taluk | : தி.மலை. |
| Caste | : ரெட்டியார் |
| Calling | : விவசாயம் |
| Religion | : இந்து |
| Age | : 50 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09-09-2019 .

முதல் விசாரணை.

நான் தற்போது பெரியகல்லாப்பாடி மதுரா கருவட்டான்பாறை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ளது என்னுடைய கையொப்பம் தான். எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையொப்பம் தான். அந்த **கையொப்பம் அ.த.சா.ஆ. 6 (வரிசைகள்)** கைப்பற்றுதல் மகஜர் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பங்கள் அ.த.சா-ஆ. 7 (வரிசைகள்)** . ஆஜர் எதிரிகளை தெரியும். 7 வருடத்திற்கு முன்பாக பிள்ளையார் கோவிலிடம் கையெழுத்து போட்டேன். அங்கு இருந்த கல், 2 செங்கல் ஆகியவற்றை போலீசார் கைப்பற்றினார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை .**

போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் இட்டேன். மற்றபடி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை. என் முன்னிலையில் எதையும் கைப்பற்றவில்லை.

ஒப்பம்/- ராமகிருஷ்ணன்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- C. Thirumagal
Principal Sessions Judge,
Tiruvannamalai.